விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 8 இதழ் 10
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 20-2-1994


## ஐரோப்பிய நாடுகளில் தமிழருக்கு புகலிடம் தேடும் யு.என்.எச்.சி.ஆர்

(லண்டன்)

ஐரோப்பிய நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரும் இலங்கையருக்கு தற்காலிக நுழைவு உரிமைச்சான்று வழங்கப்பட வேண்டுமென அகதிகளுக்கான ஐ. நா. செயலகம் யு.என்.எச்.சி.ஆர். கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் இனப்பிரச்சினை தீரும் வரை அங்கிருந்து வரும் அகதிகளுக்கு ஐரோப்பிய நாடுகளின் குடிவரவு குடிய

(4ம் பக்கம் பார்க்க)

## காமினிக்கு எதிராக எதிர்ப்பு வலுக்கிறது

(கொழும்பு)

ஐ. தே. கட்சியில் மீண்டும் சேர்ந்து கொண்ட திரு. காமினி திஸநாயக்காவின் விண்ணப்பத்தை உறுதிப்படுத்தும் முகமாக கூட்டப்பட இருந்த ஐ தே க. மத்திய

(4ம் பக்கம் பார்க்க)

## 700 பொலிஸார் மீது குற்றவியல் விசாரணை

(கொழும்பு)

இலங்கை பொலிஸ் திணைக்களம் 700 பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக குற்றவியல் விசாரணையை நடாத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

லஞ்சம், ஊழல், மோசடி உட்பட பல்வேறு குற்றவியல் நடவடிக்கைகளில் இந்த அதிகாரிகள் ஈடுபட்டமை கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாகவும்

(4-ம் பக்கம் பார்க்க)

## ★ முப்படைகளின் உதவியுடன்

# வடக்கில் இராணுவ தாக்குதல்

# தொடர்ந்தும் நடைபெறும்

## - இராணுவம் அறிவிப்பு -

(கொழும்பு)

வடபகுதியில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை தொடர்ந்தும் நடைபெற்று வருவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமன நேற்றுத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்: சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் புலிகளின் பதுங்கு நிலைகள் அழிக்கப்பட்டதாகவும், அச்சுவேலியில் புலிகளின் வாகனம் ஒன்று அழிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். இந்த இராணுவ நடவடிக்கை கிழக்கிலும் நடைபெறுவதாகவும் குறிப்பிட்டார்.

இராணுவத்தினரின் இத்தாக்குதலுக்கு முப்படைகளினதும் முழு அளவிலான உதவியும் கிடைத்துவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த ஒரு வாரமாக வாழ்ச்சேனை, முல்லைத்தீவுப் பகுதியில் விமானப்படை, கடற்படை மற்றும் இராணுவத்தினர் பொது மக்களின் குடியிருப்புகள் மீது தொடர்ச்சியான தாக்குதலை மேற்கொண்டு வருவதும் தெரிந்ததே. —சி

## விமானத்தாக்குதல் வடக்கே தொடரும்

(கொழும்பு)

வடக்கில் விமானத்தாக்குதல் தொடர்ந்து நடைபெறும் என விமானப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதல் மட்டுப்படுத்தப்பட்டதா அல்லது பரவலானதா என்பது குறித்து எதுவும் கூற அவர்கள் மறுத்து விட்டனர். நேற்று முன்தினம் முல்லைத்தீவு கடற்பகுதியில் ஹெலிகொப்டரின் உதவியுடன் 7 படகுகள் மூழ்கடிக்கப்பட்டதாகவும் நேற்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை கிழக்கிலும், வவுனியாவிலும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிரசாரத்திற்குச் செல்லும் அரசு தரப்பினர் விமானப்படை ஹெலிகொப்டர்களைப் பயன்படுத்தி வருவதாக எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா குற்றம் சாட்டியுள்ளார். —சி

## சமாதானப் பேச்சு என்பது அரசின் ஏமாற்று வேலையாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சு என்பது கிழக்கில் தமிழரை திருப்திப்படுத்தி அரசியல் ஆதாயம் தேடவும், ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமை மாநாட்டில் கண்டனக்கணைகளிலிருந்து தப்பவுமே அரசு ஏமாற்று நாடகமாடுவதாக அவதானிகள் கூறுகின்றனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் மன்சூருக்கு எதிராக அஷ்ரப் குழு கொலை மிரட்டல்

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். அஷ்ரப் கோஷ்டியினால் தமக்கு கொலை பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தக வாணிப அமைச்சர் ஏ. மன்சூர் தெரிவித்துள்ளார்.

இருந்தபோதிலும் உள்ளூராட்சி தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சியே வெற்றி வாய்ப்பு உண்டென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை தென்மாகாண சபை தேர்தல் பிரசாரத்துக்காக அரசாங்க அதிகாரிகள் கல்லி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளுக்கு அரசாங்கம் அனுப்பி வைத்துள்ளது என்றும், அரசாங்கம் கடந்த காலங்களில் தேர்தல் முறைகேடுகள் செய்தது போன்று இந்தத் தேர்தல்

(4-ம் பக்கம் பார்க்க)

## கிழக்கு காடுகளில் பெருமளவுபுலிகள்

(கொழும்பு)

கிழக்கே காட்டுப்பகுதிகளில் பெருமளவு விடுதலைப் புலிகள் உள்ளூராட்சித் தேர்தலை குழப்பும் நோக்கில் வந்து குவிந்துள்ளதாக அரசுதரப்பு தெரிவித்துள்ளது.

யாழ் குடாநாட்டிலிருந்தே இவர்கள் கிளாலி ஊடாக கிழக்குநோக்கி நகர்ந்திருப்பதாகவும் கிழக்கு கரையோரப்பகுதிகளில் படகுகள் மூலம் இவர்கள் ஆயுதங்களையும் கொண்டுவந்து சேர்த்திருப்பதாகவும் புலனாய்வுத்துறையினர் கூறியுள்ளனர்.

இதேவேளை தேர்தலைக்குழப்ப

(4ம் பக்கம் பார்க்க)

## பலாலி படையினர் கடும் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பலாலி, காங்கேசன்துறை இராணுவ முகாம்களிலிருந்து நேற்று நண்பகல் 1 மணிக்கு தெல்லிப்பளை கட்டுவன் பகுதியை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை அம்முகாம்களில் இருந்து தெல்லிப்பளைப் பகுதியை நோக்கிச் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன. இதையடுத்து இப்பகுதி மக்கள் பெரும் பீதியுடன் காணப்பட்டனர். —சி

## புலிகளுக்கு எதிரான போரில் புதிய யுத்த தந்திரோபாயம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான யுத்தத்துக்கு புதிய தந்திரோபாயங்கள் வகுக்கப்படுவதாக புதிய விமானப்படைத் தளபதி ஏயர் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

மேற்படி யுத்தத்துக்காக விமானப்படையினருக்கு தற்போது வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் புதிய முறையிலான தொழில் நுட்பம் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த யுத்தத்திற்கான ஆலோசனைகள் வருங்காலத்தில் விமானப்படை முகாமைத்துவப் பிரிவினாலேயே நன்கு திட்டமிட்டு வழங்கப்படும், என்றும் விமானப்படையின் புதிய தளபதி மேலும் தெரிவித்துள்ளார். —வீ-சி

## இலங்கை கடற்படை சூடு 2 இந்திய மீனவர் பலி

(சென்னை)

கச்சதீவுக்கு அருகில் இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இரு இந்திய மீனவர்கள் உயிரிழந்தனர். ஒருவர் படுகாயமடைந்தார். இந்திய கடற்பரப்பில் நேற்று அதிகாலை இச்சம்பவம் நடை

(4-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**25 வருட அனுபவம்**

இருபத்தைந்து வருட அனுபவமுள்ள அனுபவசாலியின் கைவண்ணத்தில் சகல பழைய, புதிய, சுவர் மணிக்கூடுகள், மேசை மணிக்கூடுகள் உத்தரவாதத்துடன் குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும். டிக்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி.

(எ 3842)

**வர்ண வேலைகள்**

விளம்பரப் பலகை, இலக்கத் தகடுகள், மனித உருவப் படங்கள், கடைவர்ணம் தீட்டுதல், வீடுகள் வர்ணம் தீட்டுதல், கோவில்கள் வர்ணங்கள், சாமி உருவப்படங்கள் ஆகிய வர்ண வேலைகளும் குறித்த தவணையில் ஓடர்களுக்கு செய்து கொடுக்கப்படும். பூபதி ஆட்ஸ். தொடர்பு முகவரி: டிக்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். (வானவில் கூல்பார் அருகாமையில்)

(எ 3845)

## வேண்டுகோள்

(பண்டத்தரிப்பு)

வலி-தென் மேற்கு பிரதேச சபையினால் ஆனைக்கோட்டையில் ஆரம்பிக்கப்படவுள்ள சித்த ஆயுள்வேத மூலிகைத் தோட்டத்தில் பயிரிடுவதற்கு மூலிகைக் கன்றுகள் தேவைப்படுவதாகவும், இவற்றை வைத்திருக்கும் பொதுமக்கள் இந்த மூலிகைக் கன்றுகளை அன்பளிப்பாகத்தந்துதவுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது

—78

செப்ரிசிமியா

## வயோதிப மாது மரணம்

(யாழ்ப்பாணம்)

செப்ரிசிமியாவினால் பாதிக்கப்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த வயோதிபமாது ஒருவர் நேற்று முன்தினம் மரணமானார்.

அச்சாலை சாமிஸன் ஒழுங்கை விருப்பைச் சேர்ந்த சூசை சவுரிஆச்சி வயது 75 என்ற வயோதிப மாதுவே மரணமானவராவார்.

## வரப்பெற்றோம்

பாவ வருஷ திருக்கணித பஞ்சாங்கம் 94/95) கணிப்பு:- வேதாகம சோதிட பூஷணம் கி. சிதம்பரநாதக் குருக்கள். வெளியீடு:- திருக்கணித அச்சகம், மல்லாகம், பக்கங்கள்-105 விலை-அறுபது ரூபா. திருக்கணித பஞ்சாங்கம் இவ்வாண்டும் வழமைபோல் 107-ம் வருடப் பதிப்பாக வெளிவந்துள்ளது. காஞ்சி காமகோடி பீடத்தினால் வருடாவருடம் வெளியிடப்படும் திருக்கணித பஞ்சாங்கத்தின் கணித முறையை அனுசரித்தே இப்பஞ்சாங்கம் கணிக்கப்பட்டு வெளிவருகின்றது. கணித சத்தமும், விஞ்ஞான மாற்றங்களுக்கமைய கிரக சஞ்சாரங்களும் துல்லியமாக கணிக்கப்பட்டிருப்பது விசேட அம்சமாகும்.

பஞ்சாங்கங்களை ரிஷிகளும், முனிவர்களும் எழுதி வைத்த சுவடிகளை (ரேகைகளை) காலத்திற்கேற்ற திருத்தங்களின்றி உபயோகித்து கணிப்பதால் ஏற்படும் கிரக நிலைகள் பிரதியட்சத்திற்கு ஒத்துவராமையை அவதானிக்க முடிகின்றது. இத்தவறுகள் திருக்கணித பஞ்சாங்கத்தில் திருத்தம் செய்யப்பட்டு வெளியிடப்படுவதாக அறிஞர்களால் பாராட்டப்படுகின்றது.

— ஜோஸ்யர்

---

# இளம் கலைஞர் மன்றம்
# 14-வது
# இசை விழா

—★—★—★—★—★—★—★—★—★—★

**இடம்:** கலா மண்டபம்

சட்டநாதர் வீதி, நல்லூர்.

9ம் நாள்

**20-2-94 ஞாயிற்றுக்கிழமை**

**தியாகராஜ உற்சவம்**

வட மாகாண ப. தெ. வ. அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் ஆதரவில்

காலை

**9-00 — 10 30 மங்கள இசை**

| நாதஸ்வரம் | தவில் |
| --- | --- |
| கே. ஆர். சுந்தரமூர்த்தி | என். கே. வீரசாமி |
| எஸ். எஸ். சிதம்பரநாதன் | ரி. உதயசங்கர் |
| வீ. கே. நம்பிராஜன் | கே. சிவகுமார் |
| ஆர். வேதீஸ்வரன் | என். ஜெயராமன் |
| ஆர். எஸ். ரஜீந்திரன் | எஸ். ராமதாஸ் |
| | பி. எஸ். ரவீந்திரன் |

**10-30 — 11-00 மங்கள விளக்கேற்றல்**

திரு. கி. கந்தசாமி (தலைவர், வலிகாமம் கொத்தணி)
திரு சி. வேலாயுதபிள்ளை தலைவர், யாழ். கொத்தணி)
திரு. தே. அந்தோனிப்பிள்ளை (தலைவர், வடமராட்சி (கொத்தணி)
திரு. அ. சிவசுப்பிரமணியம் (தலைவர், தென்மராட்சிக் கொத்தணி)

தலைவர்: திரு கி சிவநேசன்
(பொது முகாமையாளர் ப. தெ. வ. அ. கூ. ச. சமாசம்)

பிரதம விருந்தினர்
திரு இ. வெங்கடராமன்
(பொது முகாமையாளர் வர்த்தக வங்கி)

சிறப்பு விருந்தினர்:
திரு. சா. செல்வரத்தினம்,
(தலைவர் ப. தெ. வ. அ. கூ. ச. சமாசம்)

**11-00 — 11-45 பாட்டு**

ஞானகுமாரி சிவநேசன் — பாட்டு
பாக்கியலக்சுமி நடராஜா — வயலின்
எஸ். துரைராஜா — மிருதங்கம்

**11-45 — 12-30 பாட்டு**

வீ. செல்லத்துரை — பாட்டு
எஸ். வெங்கடேஸ்வர சர்மா — வயலின்
எஸ். பாலச்சந்திர சர்மா — மிருதங்கம்

**12-30—2-00 மதிய போசனம்**
**(உபயம்: திருப்பதி ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்)**

தீவக கோட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் ஆதரவில்

**மாலை 3-00 —4-00 மங்கள இசை**

ஏ. முருகானந்தம்
என். ஆர். சந்திரன் கிருஷ்ணன் } நாதஸ்வரம்
என். ஆர். எஸ். ரவீந்திரன்
என். ஆர். எஸ். சுந்தரேசன் } தவில்

**4-00 — 4-20 வீணை இசை**

யாமினி தர்மலிங்கம்
ஜெயபாரதி லோகநாதன் } வீணை
எஸ். துரைராசா — மிருதங்கம்

**4-20 — 5-05 பாட்டு**

வீ. கே. நடராசா — பாட்டு
ஆர். எஸ். கேசவமூர்த்தி — வயலின்
எஸ். துரைராசா — மிருதங்கம்

**5-05 — 5-30 வீணை இசை**

உதயந்தி வாமதேவன்
சுதர்ஷனி காசிவிஸ்வநாதன் } வீணை
எஸ். துரைராசா — மிருதங்கம்

**5-30 — 6-15 பாட்டு**

கே. ராமநாதன் — பாட்டு
எஸ். சர்வேஸ்வர சர்மா — வயலின்
எம். சிதம்பரநாதன் — மிருதங்கம்
எஸ். பாலச்சந்திர சர்மா — கஞ்சிரா

**6-15 — 7-00 வயலினிசை**

வீ. கே. குமாரசாமி — வயலின்
எம். சிதம்பரநாதன் — மிருதங்கம்
ஏ. செல்வரத்தினம் — கடம்

**7-00—7-30 மங்கள விளக்கேற்றல்**

திரு. பொ. மாணிக்கவாசகர்
(தலைவர் வேலணை ப. நோ. கூ. சங்கம்)
திரு. தி. சுந்தரலிங்கம்
தலைவர், ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்
திரு. எஸ் விக்கினேஸ்வரன்
(தலைவர், காரைநகர் ப. நோ. கூ. சங்கம்)
திரு. எஸ். உலகேஸ்வரன் (வர்த்தகர்)
தலைவர்; திரு. ப. கனகலிங்கம்
(தலைவர்: புங்குடுதீவு. நயினாதீவு ப. நோ. கூ. சங்கம்
தலைவர் தீவகக்கோட்டம்

பிரதம விருந்தினர்:
திரு. எஸ். சிவபாலன்
மகப்பேற்று நிபுணர் (யாழ். போதனா வைத்தியசாலை)

சிறப்பு விருந்தினர்
வைத்திய கலாநிதி: எஸ். பி. ஆர். சிரீமாறன்
(யாழ். பல்கலைக்கழகம்)

**7-30 — 8-15 பாட்டு**

எஸ். கணபதிப்பிள்ளை — பாட்டு
பாக்கியலக்சுமி நடராஜா — வயலின்
எஸ். மகேந்திரன் — மிருதங்கம்
ஏ. செல்வரத்தினம் — கடம்

**8-15—9-30 மங்கள இசை**

என். கே. பத்மநாதன்
வீ. கே. பஞ்சமூர்த்தி } நாதஸ்வரம்
கே. நித்தியானந்தன்
ரி. உதயசங்கர்
ஆர். எஸ். சுந்தரேசன் } தவில்
க. சிவகுமார்

வாழ்த்துவோர்:

## செல்வராஜா
## எரிபொருள் நிலையம்
## திருநெல்வேலி

(ஏ 3826)

---

# அரச நிர்வாக சேவையில் 1,298 வெற்றிடங்கள்

(கொழும்பு)

அரசாங்க நிர்வாக சேவையில் தற்போது வெற்றிடமாக இருக்கும் 1298 வெற்றிடங்கள் மிக விரைவில் நிரப்பப்படுமென்று அரசு நேற்று அறிவித்தது.

கடந்த வருடம் போட்டிப் பரீட்சைகள் மூலம் தெரிவு செய்யப்பட்ட 321 பேருக்கு விரைவில் நியமனங்கள் வழங்கப்படும்.

இன்னும் 1298 வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றது. இதற்கு நாடு முழுவதும் ஒரேநேரத்தில் எழுத்துப்பரீட்சைகளும் நேர்முகப் பரீட்சைகளும் வைத்து இவ்வருட நடுப்பகுதிக்குள் நிரப்பப்படுமென்று அரசு அறிவித்துள்ளது.

வீ-சி

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு வலைத் திரும்பட்ட விளையாட்டுக் கழக நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் நிகழ்வொன்று கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மண்டபத்தில் இன்று 20-ம் திகதி முற்பகல் 9-30 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த சகல விளையாட்டுக் கழகங்களின் நிர்வாக சபை உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு கேட்டுக்கொள்கின்றது.

(நி)

## உப்பள ஊழியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய உப்புக்கூட்டுத்தாபனத்தில் அமைய, பருவகால ஊழியர்களாக கடமையாற்றித் தற்பொழுது வேலையை விட்டு விலகி அல்லது வேலையை இழந்திருக்கும் ஊழியர்களுடைய தற்போதைய நிலைமை பற்றிசம்பந்தப்பட்ட அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்த வசதியாக அவர்களது சுயவிபரங்கள் தேவைப்படுகின்றது.

இதுவரை விபரங்களைக்கொடுக்காதவர்கள் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் பிராந்திய காரியாலயத்தில் எதிர்வரும் 27-ம் திகதி அல்லது அதற்கு முன் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

---

**யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்**

# தற்காலிக தொழிலாளர் வெற்றிடம்

யாழ்ப்பாண மாநகரசபை அமைய அடிப்படையில் சுத்திகரிப்புப் பணியுடன், கழிவுப் பொருட்களையும், நிர்மாணப் பொருட்களையும் ஏற்றியிறக்கும் தொழிலாளர்களை நியமனம் செய்வதற்குத் தீர்மானித்துள்ளது.

கீழ்க்காணும் தகைமைகளையுடையோர் தாமே தயாரித்த விண்ணப்பத்துடனும் தமது தகைமைகளை நிரூபிக்கும் மூலச் சான்றிதழ்களுடனும், தேசிய அடையாள அட்டையுடனும் எதிர்வரும் 27-02-94ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு நல்லூர் பண்டாரமாளிகை வளவிலமைந்துள்ள மாநகரசபை அலுவலகத்திற்கு சமூகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகைமைகள்:

(அ) கல்வி: ஐந்தாம் வகுப்பில் சித்தி.
(ஆ) வயது: 18 தொடக்கம் 40 வயது வரை.
(இ) யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 19-02-1994.

(எ 3844)

மணிவாக்கு

அச்சத்தினால் அன்பை விளைவிக்க முடியாது.

- மகாகவி பாரதி

## நமது நோக்கு

### தமிழின் தூய்மை காத்திடுவோம்!

"எழிலகம், படமாடம், பணகம், மகிவகம், சுவைவருவி, பசுஞ்சோலை...!

இவற்றைக் கேட்கும் போது இன்பத்தேன் வந்து பாயவில்லையா காதினிலே!

யாழ். நகரிலே, வணிக நிலையங்களின் பெயர்கள் இப்படித் தமிழாக அழைக்கப்படும் போது, தமிழை அன்னிய மொழி ஆதிக்கத்திலிருந்து விடுவிப்போர் முயற்சியைப் பாராட்டாமல் இருக்க முடியுமா?

அந்தலர்க்கெல்லாம் தமிழன் அடிமையாகியது மாத்திரமல்லாது, தனது தாய் மொழியை அடகு வைத்து, அடிமைப்பட்டு அவலிக்கோலப் படுத்திய இறுமை வேதனைக்குரியது!

தேவமொழி, இறைவனோடு தொடர்பு கொள்ள ஏற்ற மொழி என்ற பேச்சில் மயங்கி, எமது இடைக்காலப் புலவர்கள் செய்தது என்ன?

தமிழையும் வடமொழியையும் கலந்து "மணிப்பிரவாள நடை" எனப் போற்றி, எழுதி வந்ததால் ஏற்பட்ட விளைவு என்ன?

சங்ககாலத்திற்கு முற்பட்ட காலம் முதல் தூய்மை கெடாதிருந்த ஒண்டீந்தமிழ், அன்னிய மொழி வடுக்கள் பெற்று, வலுவிழந்து அழகிழந்தது தான் நடந்த கதை!

ஆங்கிலேயர் நம்மை அடிமையாக்கியபோது, அரச பதவிகள் பெற்றிட ஆங்கிலத்தைப் படித்தோம். அவ்வளவோடு நின்றோமா?

ஆங்கில மோகம் அளவுக்கு மீறியதால் தமிழும் நஞ்சாகிவிட்டது. ஆங்கிலத்தைக் கலந்து எழுதுவதே பெருமை என்ற "பித்தம்" பெருமையாக் தாய்மொழியை கெடுத்துவிட்டோம்.

தமிழகத்திலே மறைமலையடிகள் தோற்றுவித்த தனித்தமிழ் இயக்கமும், திராவிட இன எழுச்சியால் வளர்ச்சியுற்று, அழகுத் தமிழ் வாதமாக மாறி, செந்தமிழ் மறுமலர்ச்சி கண்டது என்பதை நாம் மறுப்பதற்கில்லை.

இன்று, அங்கிருந்து வரும் நவீன சஞ்சிகைகளைப் பார்க்கும்போது, பழைய குருடி கதவைத் திறவடி என்ற நிலை ஏற்படுமோ என அஞ்ச வேண்டியுள்ளது.

இத்தலைமையில், தமிழீழக் கல்வி வளர்ச்சிக் கழகம், தமிழின் தூய்மை காத்திட, தமிழறிஞர்கள், ஆசிரியர்கள், வணிக நிலையத்தினர் போன்ற பல துறையினரும் பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டும்!

தமிழகத்திலுள்ள ஈழ அகதிகள்

# தேர்தலில் வாக்களிக்கவே திருப்பி அனுப்பப்படுகிறார்கள்

## பத்திரிகைகள் குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழகத்தில் தற்போது தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளை, இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் நடைபெறவிருக்கும் தேர்தல்களில் வாக்களிக்கச் செய்யும் முகமாகவே இலங்கைக்கு அனுப்பப்படுவதாகத் தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் குற்றம் சாட்டியுள்ளன.

இலங்கைத் தமிழ் அகதிகளின் விருப்பத்தின் பேரிலேயே திருப்பி அனுப்பப்படுகின்றனர் என்ற போர்வையில் இவர்கள் வலுக்கட்டாயப்படுத்தி இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவதாக அப்பத்திரிகைகள் சுட்டிக் காட்டியுள்ளன.

இந்தத் திரை மறைவு வேலைக்கு இலங்கை அரசாங்கமும்-தமிழகத்தில் உள்ள சில உயர் அதிகாரிகளும் உடந்தையாக இருக்கிறார்களாம்.

இதனாலேயே தமிழகத்தில் உள்ள அகதிகள் முகாம்களில் தற்போது பெரும் மோதல்கள் அடிக்கடி நடைபெறுவதாகவும் அப்பத்திரிகைகள் மேலும் குற்றம் சாட்டியுள்ளன. வி-1

★ கிராமிய வாசகசாலையும் கண்காட்சியும்

# பின்தங்கிய இராஜகிராமத்தை

## முன்னேற்ற புலிகள் நடவடிக்கை

வடமராட்சிப் பகுதியில் நெல்லியடிச் சந்தியில் இருந்து கிழக்கே 400 யார் தூரத்தில் தாழ்வான நிலப் பரப்பில், 287 குடும்பங்களைக் கொண்டு விளங்குகிறது ஒரு பின்தங்கிய கிராமம். 'இராஜ கிராமம்' எனப்படும் இக்கிராமம், 1979ம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் கிராமிய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டதாகும்.

அடிப்படைச் சுகாதார வசதிகளின் பற்றாக்குறை, மருத்துவ வசதிகள் போதாமை போன்ற பல காரணங்களால் இப்பகுதி முன்னேற்றப்பட வேண்டிய ஒன்றாகவே இருந்து வருகிறது.

இக்கிராமத்தில் ஏறக்குறைய 25 வீதமான மக்கள் பாடசாலைக்கே போகாதவர்களாக உள்ளனர். பேசாக்கின்மையும் இங்குள்ள ஒரு முக்கிய பிரச்சினையாகும். 200 குடும்பங்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றன. இவற்றுள் 100 குடும்பங்கள் அன்றாட உணவுக்கே அல்லலுறும் நிலையில் உள்ளன. இதனால் 71 சிறுவர்கள் போசாக்கின்மையால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

பல பிரச்சினைகளைக் கொண்ட இக்குடியிருப்புப் பகுதி முன்னேற்றப்பட வேண்டுமாயின், பல வேலைத் திட்டங்களையும் உள்ளடக்கிய தகுந்ததொரு 'கிராமிய மேம்பாட்டுத் திட்டம்' வரையப்பட்டு உரிய முறையில் திறம்பட நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

குடிநீர், மலசுட வசதிகள் ஏற்ற வகையில் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும். அத்துடன் இவற்றின் முக்கியத்துவம், பயன்படுத்தல் பற்றிய அறிவையும் ஊட்டுதல் வேண்டும். முதியோர் கல்வி நிலையம், பாலர் கல்வி நிலையம் செம்மையாக நடத்தப்படல் வேண்டும்.

இவ்வூரின் மத்தியில் ஒரு 'குழந்தைகள் காப்பகம்' அமைக்கப்படல் வேண்டும். இக்காப்பகத்தில் பாலர் கல்வி, நற்பழக்கங்கள், விளையாட்டு என்பன வயதிற்கேற்ப ஊட்டப்படல் வேண்டும். இதனால் எதிர்காலத்தில் ஓர் ஆரோக்கியமான சமூகம் உருவாக வழி அமைக்கப்படும்.

பயன்தரு மர நடுகை, வேலி வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு ஆகியன குறித்து அறிவூட்டுதலும், ஊக்குவிப்புகளும், உதவிகளும் வழங்கப்படுதல் அவசியமாகும்.

பல்வேறுபட்ட தேவைகளை உடைய இக்கிராமத்தின் பிரச்சினைகளை ஆராய்ந்து, அவற்றினை இயன்றவரை வெற்றி கொள்ளும் நோக்குடன் த. வி. புலிகளின் சகல துணை அமைப்புகளும் 'கிராமியப் பாசறையும் கண்காட்சியும்' எனும் நிகழ்வினூடு அம்மக்களை அணுகுகின்றார்கள்.

இவ்வமைப்பு வெற்றி தரும் பட்சத்தில் இது போன்ற பல வேறு பகுதிகளும் முன்னேற்றம் அடைந்து விடுதல் அடைப்போமும் எமது தேசம் சபிட்சமாக விளங்கும் என்பது உறுதி.

ஆபிரிக்காவில் —

# 10 லட்சம் சிறுவர்கள் மலேரியாவினால் மரணம்

(ஜெனீவா)

மலேரியா நோயினால் ஒவ்வொரு வருடமும் ஆபிரிக்காவில் பத்து லட்சம் சிறுவர்கள் மரணமடைவதாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

உலகில் ஆண்டு தோறும் ஐம்பது கோடிமக்கள் மலேரியாவினால் பாதிக்கப்படுவதாகவும் சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்நோய்க்காக தற்போது புதிதாக 'எஸ். பி. எஸ்.-66' என்ற மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மலேரியாவை பெருமளவு கட்டுப்படுத்தலாமென விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (கி)

பௌத்த மக்களை

# மதம்மாற்றும் சக்திகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கொழும்பு

பௌத்தமத மக்களை மதம் மாற்றும் முயற்சிகளை மேற்கொள்ளும் சக்திகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க தெரிவித்துள்ளார்.

பௌத்த சாசன அமைப்பின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பௌத்தமதத்தின் மேலாண்மைக்கு இடையூறு விளைவிக்கும் முயற்சிக்கு சர்வதேச சக்திகள் உள்ளூர் சக்திகளுக்கு ஊக்கம் கொடுத்து வருகின்றன எனவும் பௌத்த மக்களின் வறுமை படிப்பறிவின்மை போன்றவற்றை அடிப்படையாக வைத்து இம்மதம் மாற்றும் முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார். - தி

வீதியோரம் மரம் நடுவோம்
விழிபோலக் காத்திடுவோம்

# இராசிபலன்

20-2-1994

ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு மாசி 8)

நவமி பி. ப. 10-58 வரை, ரோகிணி காலை 6-40 வரை, மரண யோகம், இராகுகாலம் மாலை 5-02 முதல் 6-32 வரை, சுபநேரம் காலை 9-32 முதல் 11-00 வரை.

மேடம்: தீயோர் நட்பு, மனக்குழப்பம், வாக்குப் பகை.

இடபம்: அசைந்தப்போக்கு அலங்கரித்தல், யோசனை.

மிதுனம்: தொழிற்சிறப்பு, சுபகாரியச் செலவு, நண்பர் சகவாசம்.

கடகம்: தியாக சிந்தை, மழலைகள் அன்பு, பண வரவு.

சிம்மம்: காரியசித்தி, உறவினர் வருகை, மகிழ்ச்சிப் போக்கு.

கன்னி: பெண்பகை, வருமைப்பாதிப்பு, குடும்பவிரிசல்.

துலாம்: மனத்துயர், வேலைக் கஷ்டம், வேசய வசீகரத்தை.

விருச்சிகம்: விரோதிகளை ஜெயித்தல், நற்பணி, விருந்து.

தனுசு: முரண்பாடு நீங்குதல், தானவிப்பு, பயண நன்மை.

மகரம்: பெட்டிதனம், புதிய சிக்கல், பணமுடை.

கும்பம்: தொழில் ஏமாற்றம், வாக்குநீபகை, தியானம்.

மீனம்: சான்றோர் உபதேசம், புதிய பொறுப்பு, தானதர்மம்.

— ஜோஸ்யர்

## இன்று

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை ஆதிபுலம் ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் கோவில் 5ம் திருவிழா மஞ்சம் இன்று காலை 11 மணிக்கு விஷேட அபிஷேகம் பூசைவழிபாட்டுடன் இடம்பெறும். 154

0 0 0

(கொழும்புத்துறை)

இந்து சமயப் பேரவையின் ஆண்டுப் பொதுக் கூட்டம் இன்று காலை 10-00 மணிக்கு சைவ சிறுவர் இல்லத்தில் ஆத்மஜோதி திரு நா. முத்தையா தலைமையில் இடம்பெறும். —154

0 0 0

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் ஆலயத்துளாய் சேக்கிழார் மன்றம் நடாத்தும் சேக்கிழார் நாயனார் பெருவிழா இன்று சங்கானை சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

0 0 0

(யாழ்ப்பாணம்)

தமிழ் சோதிட ஒன்றியத்தின் மாதாந்த ஆய்வரங்கு இன்று மாலை 3-00 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மணிமனையில் நடைபெறும். ஆய்வரங்கில் ஏ. வைத்தியநாதர் கிரகங்களின் சுபத்தன்மை என்ற பொருளிலும், ஐயா சச்சிதானந்தம் இராகுகாலம் என்ன செய்யும்? என்ற பொருளிலும் ஆய்வுரை வழங்குவர். —எஸ்

0 0 0

(யாழ்ப்பாணம்)

வண்ணை - சந்நிதையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் முதன்முறையாக நடாத்த இருக்கும் மாலை கட்டுதல், கோலமிடுதல், தோரணம் பின்னுதல் ஆகிய செயல்முறைப் போட்டிகள் இன்று 20ம் திகதி ஞாயிறு ஆலய மண்டபத்திலும், அருகில் உள்ள யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்திலும் காலை 10-00 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் முடிவுற்றதும் பி.ப. 1-00 மணிதொடக்கம் கண்காட்சிக்காக திறந்து வைக்கப்படும்.

0 0 0

(சுன்னாகம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ் கிளையின் அனுசரணையுடன் வலிகாமம் வடக்குப் பிரிவினால் இன்று 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2-00 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடாத்தப்படவுள்ள செஞ்சிலுவைச் சங்க ஸ்தாபகர் ஹென்றி டுனன்ட் ஞாபகார்த்த விழாவில் சிறப்பு மலரொன்றும் வெளியிடப்படும்.

யாழ். கிளையின் செயலாளர் பேராசிரியர் கி. வே. கணேசலிங்கம் ஹென்றி டுனன்ட் நினைவுப்பேருரையை நிகழ்த்துவார். பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட ஆணையாளரும் அரச அதிபருமாகிய திரு. க. மாணிக்கவாசகர் கலந்து கொள்கிறார்.

## தவக்கால நற்சிந்தனை

"ஆண்டவரே, இரக்கமாயிரும்; ஏனெனில் நாங்கள் பாவம் செய்தோம்." (சங் 50: 1 அ)

ஒரு மனிதனாலே வந்த பாவம். அனைவரையும் பிடித்துக் கொண்டது. இதனால் நாம் கடவுளின் அன்பையும் அருளையும் இழந்தவர்கள் ஆனோம். இதிலிருந்து நாம் விடுதலை பெறவே இறைமகன் கிறிஸ்து வந்தார். அந்த இறைமகனை நாம் இறைஞ்சினால், இரக்கம் பெறுவோம், இருளிலிருந்து நீங்குவோம், இழந்த இறையருளைப் பெறுவோம்.

-மோ. ததேயுஸ்

